# திருக்குறளில் இல்லறமும் சொல்லறமும்

***பேரா. பெ. காளியானந்தம்***
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

***முனைவர் கா. கணநாதன்***
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தமிழ்ப்பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்

**மலர்: 12**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: மே**

**வருடம்: 2025**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v12iS1-May.8973

***ஆய்வுச்சுருக்கம்***

*திருவள்ளுவர் திருக்குறளில் இல்வாழ்க்கை எனும் ஐந்தாவது அதிகாரத்தில் தொடங்கி புகழ் என்னும் இருபதாவது அதிகாரம் வரை விரிவாக உணர்த்துகின்றார். எனினும் இல்லறத்தின் முக்கிய காரணிகளாக விளங்கும் கணவன், மனைவி, குழந்தைகள் எனும் மூவரின் பண்புகளையும், பெருமைகளையும் முதல் மூன்று அதிகாரத்தில் விவரிக்கிறார். அடுத்து வரும் பதினேழு அதிகாரங்களில் இவர்களோடுதொடர்புடையசமூகமக்களையும்அவர்களுக்குரியஅறங்களையும் விளக்கியுள்ளார். எனினும் கணவன் மனைவி குழந்தைகள் என்னும் மூவரும் தனக்குரிய கடமைகளில் வழுவாமல் அறங்களைப் பின்பற்றி வாழும் சிறந்த இல்லறத்தை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.*

## முன்னுரை

தொன்மையும் உண்மையும் நிறைந்த தமிழ்ப்பண்பாட்டை நிலைநிறுத்தும் தமிழ் இலக்கியங்களில் திருக்குறளும் ஒன்று. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - உலகம் அனைத்தும் ஒரு குலம் என்னும் பழந்தமிழரின் பண்பாட்டின் சாரமாகத் தோன்றிய நூல் திருக்குறள். மனிதகுலம் அனைத்திருக்கும் பொதுவான அறத்தைக் கூறுவதால் இந்நூல் உலகப்பொதுமறை எனப் போற்றப்படுகிறது. இந்நூல் வாழ்க்கைக் கோட்பாடுகளாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கினுள் முதல் மூன்றை விளக்குகின்றது. இம்மூன்றையும் முறைப்படி வாழ்ந்தால் வீடுபேறு தானாகக் கிட்டும் என்பது வள்ளுவரின் கோட்பாடாகும். இத்தகு பெருமைமிக்க திருக்குறளில் இல்லறமும் சொல்லறமும் குறித்த ஆளுமைச் சிந்தனைகள் சிலவற்றை வெளிபடுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இல்லறவியலில் அமைந்துள்ள அதிகாரங்கள்**

1. இல்வாழ்க்கை
2. வாழ்க்கைத் துணை நலம்
3. மக்கட்பேறு
4. அன்புடைமை
5. விருந்தோம்பல்
6. இனியவை கூறல்
7. செய்ந்நன்றி அறிதல்
8. நடுவுநிலைமை
9. அடக்கமுடைமை
10. ஒழுக்கமுடைமை
11. பிறனில் விழையாமை
12. பொறையுடைமை
13. அழுக்காறாமை
14. வெஃகாமை
15. புறங்கூறாமை
16. பயனில் சொல்லாமை
17. தீவினையச்சம்
18. ஒப்புரவறிதல்
19. ஈகை
20. புகழ்

**அறம் – விளக்கம்**

அறம் என்ற சொல் பழந்தமிழ் இலக்கியங்களில் பல இடங்களில் பயின்று வந்துள்ளது. அறம் என்ற சொல்லுக்கு கையறம் கருமம் நீர்மை நூற்பயனில் நான்கினொன்று, மனம், வாக்கு, காயம் நற்சிந்தனை நற்சொல் பெரியோரின் இயல்பிலொன்று தமிழ் மொழி அகராதி (ஜான்சாமுவேல்) கூறுகிறது. தனிமனிதனின் வாழ்வும் பொதுவாழ்வும் சீராக இயங்கத் தனிமனிதனும் அரசும் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கத்தின் அடிப்படையான நெறிமுறைகள் என்றும் கடமைகள் என்றும் கொள்ளலாம். இந்த ஒழுக்கத்தின் அடிப்படையிலான வாழ்வின் இன்றியமையாத நெறிமுறை என்பது புலனாகிறது.

**வள்ளுவர் காட்டும் இல்லறங்கள்**

தனிமனித வாழ்வில் இவ்வொருவரும் பின்பற்ற வேண்டிய ஒன்று இல்லறமாகும். இல்லறத்தின் வழியாகத் தான் இன்பந்துய்க முடியும். பொருளின்பமானலும் சரி, வீடு பேற்றின்பமானலும் சரி இல்லறமே வாழ்வின் முதல் படி.

**அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல**

**(குறள் 39)**

ஒருவன் செய்யும் அறத்தினால் கிடைக்கும் இன்பமே மிகுந்த பெருமைக்குரியதாகும். மற்றல்லா செயல்களுக்காகவும் கிடைக்கும் புகழ் இன்பமுடையதாக இருந்தாலும் அது சிறந்த புகழ் ஆகாது என்கிறார் வள்ளுவர்.

**மனைவியின் மாண்பு**

குடும்பத்திற்குத் தேவையான நல்ல குணங்கள் நிறைந்த மனைவியைப் பெற்ற யாவருக்கும் சிறந்த புகழைத் தரும். அவ்வாறு குணங்கள் இல்லாத மனைவியைப் பெற்றவருக்கு சிறப்பான புகழ் பெருமை யாவும் பயனில்லாமல் போய்விடும் என்பதை,

**மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் துயினும் இல்**

**(குறள் 52)**

எனும் குறள் விளக்குகிறது. இல்லறத்தில் இன்பம் மலர வேண்டுமானால் மனைவி கற்புடையவளாக இருக்க வேண்டும். தன் கணவனுக்குத் தோழியாகவும், தாயாகவும், கற்புடைய மனைவியாகவும் இருந்து கடமையாற்றுவதே கற்புடைப் பெண்ணின் கடமை என்று திரிகடுகமும் கூறுகின்றது.

**நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்**
**இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய் - தொல்குடியின்**
**மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்**
**கற்புடையாள் பூண்ட கடன்**

**(திரிகடுகம் – 64)**

நல்ல விருந்தினரைப் பாதுகாப்பதில் கணவனுக்கு உற்ற நண்பனாக விளங்க வேண்டும். இல்லறத்தை வழுவாது நடத்தும் போது பெற்றதாய்க்குச்சமமாகமதிக்கப்படுகிறாள். தன் பழமையான குடும்பம் பெருமையும் ஒளியும் பெறுவதற்குரிய மக்களைப் பெறும் பொது சிறந்த இல்லத்தரசியாகிறாள். என்று ஒரு பெண்ணின் கடமை இன்னது என்று விருந்தோம்பல் அதிகாரத்தில் வள்ளுவர் சிறப்பாக உணர்த்துகிறார்.

இல்லறத்தை நன்றாக நடத்தி, பெருமை மிக்க பிள்ளைகளைப் பெற்று குடும்பத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் எனும் கருத்துக்கள் இக்காலத்திற்கும் தேவை. ஆனால் இம்முறைகள் இன்று பல குடும்பங்களில் இல்லாத காரணத்தால் தான் பெற்றோரும் பிள்ளைகளும் வள்ளுவர் கூறும் பண்பாட்டிலிருந்து விலகி, இன்னல் பட்டு வாழ்வதைக் காண்கின்றோம். எனவே வள்ளுவர் கூறும் பழந்தமிழர் பண்பாட்டுடன் வாழ்ந்தால் இல்லத்திலேயே மகிழ்ச்சியும், மன வளமும் பெருகும் என்பது திண்ணம். இவையே இல்லறத்தின் அறநெறிகள் என்கிறார் வள்ளுவர்.

## இல்லறத்தில் கணவனின் மாண்பு

தென்புலத்தாரை வணங்குவதும், தெய்வதைப் பணிவதும், விருந்தினரைப் பேணுவதும், சுற்றத்தாரைப் பாதுகாப்பதும் தன்னைத்தான் பாதுகாத்துக் கொள்வதும் கணவன் எனும் இல்வாழ்வானின் கடமை என்கிறார் வள்ளுவர்.

**தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை (குறள் 43)**

1. தென்திசையிலுள்ள இறந்த மூதாதையர்கள்
2. தெய்வங்கள்
3. விருந்தினர்கள்
4. உற்ற உறவினர்கள், சுற்றதார்கள்
5. தான் என்னும் தன்னை

ஆகிய ஐவரையும் பேணிக்காத்து சீர்தூக்கிப் போற்றி வாழ்வது தான் இல்லறத்தானின் கடமையும் அறமுமாகும்.

ஒருவன் தன்னை அறவழிகளில் நிறுத்திக்கொள்ளாவிடில், தன்னைச் சார்ந்தவர்களுக்கு அறவழிக் கடமைகளை ஆற்ற முடியாது என்பதால் தான் இல்லத்தோரையும் சேர்த்துக் கூறுகிறார் வள்ளுவர். இதையே,

இல்லறமென்பது கற்புடைய மனைவி யோடு, இல்லின் கண் இருந்து செய்யும் அறம். அதன் துறையாவன: தன்னை ஒழிந்த மூவர்க்கும், துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும், தேவர்க்கும், முனிவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத் தார்க்கும், பிறர்க்கும் துணையாதலும், வேள்வி செய்தலும், சீலம் காத்தல் முதலியனவும், அருளும் அன்பும் உடையன ஆதலும், பிறவும்

(சிலம்பு - 14:11 உரை )

என்று சிலப்பதிகார உரை கூறுகிறது.

கணவன் மனைவி அன்புடனும் அறத் துடனும் வாழ்தல் அறம் என்ற சொல்லின் பொருளாகும். அதுவே சிறந்த இல்வாழ்க்கை ஆகும். ஆதலால் பிறர் பழியாவண்ணம் வாழ்தல் வேண்டும். இல்வாழ்கை நடத்துபவன் தானும் அறவழியில் நின்று பிறரையும் வாழ வைப்பதே இல்வாழ்கை என்பது விளங்குகிறது.

## மக்கட்பேறு

நல்ல மக்களைப் பெறுதல் இல்வாழ்க்கைக்கு அழகு. திருமணத்தின் வழியாக இணைந்த கணவனுக்கும் மனைவிக்கு முறையே தந்தை, தாய் எனும் தகுதியைத் தருவது மக்கட்பேறு என்னும் அறமாகும். கணவனையும் மனைவியையும் பிணைத்துள்ள அன்பு எனும் கயிற்றுக்கு உறுதிப்பாட்டை மென் மேலும் உருவாக்கித் தருவது குழந்தைச் செல்வமே ஆகும். இதனை வள்ளுவர் மக்கட்பேறு எனும் அதிகாரத்தின் வழி விளக்குகிறார்.

ஒருவன் தன் வாழ்க்கையில் மிகுந்த செல்வத்தைப் பெறலாம். உயரந்த பதவிகளை அடையலாம். வேறு சிறப்புக்களையும் பெறலாம். ஆனால் வள்ளுவரைப் பொறுத்தவரை ஒருவன் பெறக்கூடிய பேறுகளில்எல்லாம்அறியவேண்டியவற்றை அறிந்தவர்களாக அவனுடைய மக்கள் இருப்பார்களானால் அதுவே மிகச்சிறந்த பேறு எனும் கருத்தை உறுதிப்படுத்துவதற்காக,

***பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த***
***மக்கட்பேறு அல்ல பிற***

***(குறள் 61)***

என்னும் குறளைப் படைக்கிறார்.

இவ்வுலகில் புகழுடன் வாழ்ந்து மறுவுலகிலும் சிறந்த இடத்தைப் பெறுபவர் யார் எனில் பகைவரும் கண்டு விரும்பத்தக்க குற்றமற்ற நல்ல பண்புகளை உடைய குழந்தைகளைப் பெற்றவர்களே என்ற கருத்து சங்க காலத்தில் இருந்ததாகச் செல்லூர்க் கோசிகன் கண்ணனாரின் பாடல் கூறுகிறது.

***இம்மை உலகத்து இசையொடும் விளங்கி***
***மறுமை உலகமும் மறுஇன்று எய்துப***
***செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்***
***சிறுவர்ப் பயந்த செம்மலோர்...***

***(அகம் – 66: 1 – 4)***

திருக்குறளிலும் இதே கருத்து காணப்படுகிறது. பிறரால் பழிக்கப் பட்டாலும், நற்குணங்களுடன் கூடிய மக்களைப் பெற்றால் இப்பிறவியில் மட்டுமில்லாமல் பின்வரும் பிறவிகளிலும் அந்த மக்களின் பெற்றோர்களைத் துன்பங்கள் அணுகாது என்கிறார் வள்ளுவர். இதனை,

***எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்***
***பண்புடை மக்கட் பெறின்***

***(குறள் 62)***

எனும் குறள் விளக்குகிறது. மேலும் குழந்தைகளால் பெறும் இன்பத்தை,

***மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்***
***சொற்கேட்டல் இன்பம் செவிக்கு***

***(குறள் 65)***

***குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்***
***மழலைச்சொல் கேளா தவர்***

***(குறள் 66)***

***தந்தை மகற்காற்று நன்றி அவையத்து***
***முந்தி இருப்பச் செயல்***

***(குறள் 67)***

***தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
***மன்னுயிர்க் கெல்லாம் இனிது***

***(குறள் 68)***

***ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்***

***(குறள் 69)***

***மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை***
***என்நோற்றான் கொல்எனும் சொல்***

***(குறள் 70)***

என்னும் குறள்கள் விளக்குகின்றன. செல்வத்தில் சிறந்த பிள்ளைச் செல்வம் நற்பண்புகளுடன் வளர்ந்தால் பெற்றோர்களுக்கு எழு பிறவிக்கும் துன்பம் இல்லை. குழந்தைகள் நன்கு கல்வி கற்று பெருமை சேர்க்க வேண்டும். பிள்ளைகளை நற்பண்புகளுடன் கல்வியில் சிறந்தவர்களாக உருவாக்குவது தந்தையின் கடமையாகும்.

இவ்வாறு தம் பிள்ளைகளைச் சான்றோன் எனக் கேட்கும் போது தாயானவள் இவனைப் பெற்ற பொழுதை விட பெருமிதம் அடைவாள் என்றும், பிள்ளைகளுக்கு நற்கல்வி தந்து உலகத்தார் முன் புகழ்பட வாழச்செய்தல் தந்தைக்கும் பெருமையாகும். மகனும் இவ்வாறு நடந்து கொள்ளுதல் உயர்வு தரும் என்பதை மேற்கூறிய குறட்பாக்கள் விளக்குகின்றன.

## நிறைவுரை

1. அறவழியில் வாழுகின்ற வாழ்கையே இல்வாழ்கையாகும்.

2. அந்த வாழ்க்கைக்கு, நல்ல இல்லறத்திற்கு ஒத்த பண்புகளும் கற்புமுடைய வாழ்க்கைத் துணை இன்றியமையாதது.
3. அன்பும் அறனும் உடையதாகி கணவனும் மனைவியும் சிறந்த பண்புகளையுடைய குழந்தைகளைப் பெற்று வாழ்வது சிறந்த இல்லறமாகும்.
4. குழந்தைகளுக்குப் பெற்றோர் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.
5. குழந்தைகளும் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்ய வேண்டும்.
6. இல்வாழ்வில் ஈடுபட்டு நன்மக்களைப் பெற்று மனைவியைக் காத்து சுற்றத்தைத் தழுவி விருந்தோம்பல் போன்ற சிறந்த பல அறங்களைச் செய்து வாழும் இல்லறத்தான் வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனாகிறான்.
7. இதைகைய வள்ளுவரின் அறக் கோட்பாடுகளை இக்கால மக்களும் பின்பற்ற வேண்டும். அப்போது ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு நாடும் சிறந்து விளங்கும் என்பது திண்ணம்.

### துணைநின்ற நூல்கள்

1. மு. சண்முகம் பிள்ளை, அகப்பொருள் மரபும் திருக்குறளும், சென்னை பல்கலைக்கழக வெளியீடு, சென்னை, 1980.
2. தமிழண்ணல், திருவள்ளுவர் அருளிய திருக்குறள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1991.
3. தி. முருகரத்தினம், வள்ளுவர் முப்பால் அறத்துப்பால், தமிழ்ச்சோலை பதிப்பகம், மதுரை, 1991.
4. ஆனந்த், திருவள்ளுவரின் திருக்குறளில் நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள், பாரதி நிலையம், சென்னை, 2002.